**செ. கு. எண்**: 288 **நாள்**:16.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 16.8.2012

6.8.2012 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்னம் கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பொறியியல் கல்லூரியில் நடைபெற்று வந்த கட்டடப் பணியின் போது, கட்டடம் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்கிடையே சிக்கி வெளிமாநிலங்களைச் சேர்ந்த பத்து பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் வெளிமாநிலத்தை சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்களின் வறுமையான குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**